தமிழ் நாடு சட்டப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1974 மார்ச் 12.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

ஆரோவில் நகரமைப்புக்கு நிலம்

* குறுகிய கால வினா எண் 1— திரு. துரை முருகன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டு எல்லைக்குள் " ஆரோவில் " நகர அமைப்புக்கென தமிழ்நாடு நில உச்சவரம்புச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளதற்கு மேல் நிலம் வாங்கப்பட்டுள்ளதென்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், மேற்படி சட்டத்திலிருந்து விலக்குக் கோரி, விண்ணப்பம் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(உ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) & (இ):—ஆம்.

(உ) " ஆரோவில் " நிறுவனத்தின் விண்ணப்பம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, இந்த அரவிந்தர் ஆசிரமத்திற்குச் சொந்தமாக இருக்கக்கூடிய இந்த " ஆரோவில் " டவுன்ஷிப் புதுவை இராஜ்யத்திற்குள் இல்லாமல் தமிழ்நாட்டுப் பகுதியில் இருக்கின்றது. இதை மேம்பாடு செய்வதற்கு அதிகமான தொகை மத்திய அரசு கொடுத்திருக்கிறது என்று சொல்லப்படுகிறதே, அந்தப் பணம் நமது சர்க்கார் மூலமாகக் கொடுக்கப்பட்டதா ? அல்லது நேரடியாகக் கொடுக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்த ஆசிரமத்திற்குக் கொடுக்கப்பட்ட பணம் பற்றிய விவரம் நம்முடைய அரசாங்கத்திற்குக் கிடையாது. நமது அரசாங்கத்தின் மூலமாகக் கொடுக்கப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்து—தமிழ்நாடு அரசு மூலமாகக் கொடுக்கப்படவில்லையா என்ற கருத்தைச் சொல்கிறார்கள். அப்படியொரு நிலைமை இப்பொழுது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இந்த "ஆரோவில்" நகரம் உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் உள்ளவர்கள் குடியேறுகிற ஒரு மாதிரி நகரமாக இருக்கிறது என்று கூறப்படுகிறது. அப்படிப்பட்ட ஒரு நல்ல கருத்தை ஊக்குவிக்கும் வகையில் நம்முடைய தமிழக அரசு அதற்கு வேண்டிய நிலங்களை இனமாகக் கொடுக்க வேண்டுமென்ற செயற்குறிப்பு ஏதாவது அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : துணைக் கேள்வியை யொட்டி சில விவரங்களை நான் சொல்லிவிடுவது மாண்புமிகு உறுப்பினர் களுக்கு வசதியாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

"The Aurobindo Society, Pondicherry, applied to the Collector of South Arcot in 1967 for the acquisition of 9,873·55 acres of patta lands and for the assignment of 472·29 acres of Poramboke lands in 9 villages in Tindivanam taluk of South Arcot District for the establishment of Aurovile Project. When tbe request was under examination, objections were received from the ryots of the villages and also from Thiru A. G. Balakrishnan, Ex. M.L.A. of Vanur Constituency. As the proposal involved the displacement of 3,657 families, from their ancestral homes, the Board of Revenue, in its report sent in February 1972 did not recommend the proposal for acquisition of such a large extent of lands involving displacement of the ryots in 9 villages. It was further examined by the Government. The matter was placed before the Cabinet and the Cabinet decided as follows:—

(1) No land will be acquired for the Aurovile Project under the Land Acquisition Act;

(2) No Government land will be assigned for the Aurovile Society for the purpose of this Project;

(3) The society may be free to purchase any land they like and no exemption or reduction of stamp duty will be given for these purchases;

(4) The Society may apply for exemption from the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 and its application may be considered favourably in due course and, if necessary, suitable amendment to the Act considered.

1974 மார்ச் 12]

Sri Aurobindo Society, Pondicherry has stated that it is now in possession of about 2,031 acres of land.

நம்முடைய சட்ட இலாக்கா பரிசீலனை செய்து, இது பப்ளிக் ட்ரஸ்ட்டிலே வராது, இதற்கு விதி விலக்கு கொடுக்க நியாயம் இல்லை என்ற கருத்து தெரிவித்திருப்பதால், அரவிந்த ஆசிரமத்தாரால் கொடுக்கப்பட்ட மனு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி: இந்த "ஆரோவில்" திட்டம் மோசடியான திட்டம். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதால் யாருக்கும் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. ஆகவே, நம்முடைய பூமியை அவர்களுக்குக் கொடுப்பதை சர்க்கார் நிறுத்திவைக்க ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நாங்கள் கொடுப்பதாக இல்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய கருத்து நம்முடைய வாதத்திற்கு வலுவூட்டும் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: பாண்டிச்சேரி தனி மாநிலம்; தமிழ்நாடு தனி மாநிலம். தமிழ்நாட்டிலுள்ள நிலத்தை விலைக்கு வேண்டுமென்றால் வாங்கிக் கொள்ளலாம் என்று அரசாங்கம் கருத்துக் கொண்டிருக்கிறது சரியானதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இது பாண்டிச்சேரி மாநிலம். தமிழ்நாட்டிலிருந்து வாங்குவதாக இல்லை. அரசியல் சட்டத்தில் தனி நபருக்குள்ள உரிமையை உபயோகித்துத்தான் வாங்கிக் கொள்ள வேண்டுமே தவிர, அப்படி வாங்கிக் கொள்ள சட்டத்திலிருந்து விதி விலக்கு கொடுப்போம் என்று நாங்கள் உறுதி சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி சொல்கின்ற அந்த கருத்தையும் கவனத்தில் கொண்டு, இதுபோன்ற திட்டங்களுக்கு ஆதரவு கொடுப்பது சரியல்ல என்றுதான் நம்முடைய அரசு கருது கிறது.

திரு. எம். தேவராசன்: இந்த "ஆரோவில்" திட்டம் அமெரிக்க ஏஜெண்டுகளுக்கும், உளவாளிகளுக்கும் இங்கே உளவு பார்க்க உதவும் திட்டம் என்று பரவலாகப் பேசப்படுகிறதே அது உண்மையா ? இதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நான் ஒன்றும் அறியேன் பராபரமே ! (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல் அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 371, 372 ஆகிய எண்கள் உள்ள வினாக்கள் தள்ளி வைக்கப்படுகின்றன.